[1972 டிசம்பர் 8

செஞ்சிக்கு டிராக்டர் வாடகை நிலையம்

*96 வினா.—திரு. ரா. ரா முனுசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டம் விவசாயப் பகுதியாக இருப்பதால் அங்கு டிராக்டர் வாடகை நிலையம் அமைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) தற்போது இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தென் ஆர்க்காடு மாவட்டத்தில் செஞ்சி வட்டம் மிகவும் பின்தங்கிய பகுதி என்பது அரசுக்கு நன்கு தெரியும். அங்குள்ள விவசாயிகள் குறிப்பாக மேல்மலயனூர், செஞ்சி ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டு டிராக்டர்கள் வாங்கப்பட்டு அவற்றை விவசாயிகள் பயன்படுத்துகிறார்கள். ஆகவே விவசாயிகளுக்கு அவை காலாகாலத்தில் கிடைக்க முடியாத நிலை இருப்பதால் வாடகைக்காவது டிராக்டர்களை செஞ்சி, வல்லம், மேல் மலயனூர் ஒன்றியங்களுக்கு வழங்க முடியுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இது அரசால் வழங்கப்படுவது அல்ல. தமிழ்நாடு வேளாண்மை தொழில் கழகத்தின் மூலம் டிராக்டர்கள், விவசாயத்திற்கான துணைக் கருவிகள் இவற்றை வாடகைக்கு விடுகிற திட்டம் துவக்கப்பட்டிருக்கிறது. தற்போது தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விழுப்புரத்தில் ஒன்று துவக்கப்பட்டிருக்கிறது. மேலும் மூன்று விவசாயக் கிடங்குகள் எங்கெங்கு துவங்கலாம் என்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. த. சோணையா : ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு ட்ராக்டர் என்ற முறையில் அறிவுலக மேதை, அரசியல் வித்தகர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தின விழாவில் வழங்கப்பட்டுள்ளன. அப்படி வழங்கப்படாமல் ஒருசில ஊராட்சி ஒன்றியங்கள் விடுப்பட்டிருக்கின்றன. அப்படி விடுபட்டுள்ள இடங்களில் ட்ராக்டர்கள் இல்லாது விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே வருகிற ஆண்டு அண்ணா பிறந்த தின விழாவின் போதாவது அந்தக் குறை நீக்கப்படுமா ? எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் டிராக்டர்கள் வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்படுமா ?

1972 டிசம்பர் 8]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு ட்ராக்டர் வழங்குவது என்பது அரசு மூலம் வழங்குவது என்று இல்லை. ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு உறுப்பினர் அவர்கள் தலைமையிலுள்ள ஒன்றியத்தில் இதுவரை வாங்காததன் காரணம் தெரியவில்லை. சம்பந்தப்பட்டவர்களோடு கலந்து பேசி விரைவில் அதை வாங்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. வெ. குருசாமி: மதுரை மாவட்டத்தில் ட்ராக்டர் வாடகை நிலையம் எங்கிருக்கிறது? இல்லை என்றால் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகியவை உள்ளடங்கி மதுரையில் இருக்கிறது. தற்போது தேனியில் துவக்கப்பட்டிருக்கிறது.

திரு. ப. முத்துசாமி: ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ட்ராக்டர்கள் பழுதடைந்தால் அவைகளைப் பழுது பார்க்க பக்கத்தில் பணிமனைகள் இல்லாமல் இருக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே டிவிஷன் அளவிலாவது ஒவ்வொன்று ஏற்படுத்துவதற்கும் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குவதற்கு தொலைவில் உள்ள கம்பெனிகளுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் ட்ராக்டர்கள் பழுதுபார்க்கப்படாமல் வெறுமனே இருக்கின்றன. ஆகவே அதற்கு வேண்டிய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஒன்றியங்களில் உள்ள பல கருவிகளைப் பழுதுபார்க்க இப்போது ஆங்காங்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. ட்ராக்டர்கள் போன்ற பெரிய இயந்திரங்களுக்கு தனி நிலையங்களைத் துவக்க இப்போது குறிப்பு எதும் இல்லை. முன்பு போல் இல்லாது இப்போது அரசின் பழுதுபார்க்கும் கிடங்குகள் எங்கெங்கு இருக்கின்றனவோ அங்கு பழுது பார்க்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. வி. சம்பத்: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு டிராக்டர்கள் வழங்கப்பட்டு, அந்த டிராக்டர்கள் விவசாயக் காரியங்களுக்குத்தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்று எழுதி வைத்திருந்தும், அதை சிலசமயங்களில் தனிப்பட்டவர்களும் தங்கள் சொந்த உபயோகத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை அரசாங்கம் அறியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, விவசாயிகளுக்குத்தான் வழங்க வேண்டுமென்று இருந்தாலும், விவசாய வேலை இல்லாதக் காலங்களில் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் முடிவுப்படி டிராக்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன.